# தினத்தளம்

PRGI NO: TNBIL/25/A3556

நடுநிலை நாளிதழ்

www.dhinathdhalam.com

ஆசிரியர் : முனைவர். எஸ்.மோகன்ராஜ் M.A.,PGDJMC.,Ph.D., DHINATH DHALAM Tamil & English daily Paper நிர்வாக ஆசிரியர் : முனைவர். எம்.ஹரிகிருஷ்ணன் B.A.,

மலர் Volume : 01 | இதழ் Issue : 158 | வெள்ளிக்கிழமை Friday | 04.09.2026 | பக்கங்கள் Pages:4 | ₹ 6 | ஈரோடு Erode


# ரூ.1200 கோடியில் சென்னையில் புதிய தலைமைச் செயலகம்

## சட்டப்பேரவையில் முதலமைச்சர் விஜய் அறிவிப்பு



சென்னை: சென்னையில் ரூ.1200 கோடி மதிப்பீட்டில் 20 லட்சம் சதுர அடி பரப்பளவில் புதிய தலைமைச் செயலகம் கட்டப்படும் என சட்டப்பேரவையில் முதல்வர் விஜய் அறிவித்துள்ளார்.

தமிழக சட்டப்பேரவை பட்ஜெட் கூட்டத்தொடரில் இன்று (செப்.3) காவல்துறை,தீயணைப்பு மற்றும் மீட்புப்பணிகள் துறை மானிய கோரிக்கைகள் மீதான விவாதம் நடைபெறுகிறது.

இந்நிலையில் விதி எண் 110-ன் கீழ், முதல்வர் விஜய் பல்வேறு திட்டங்களை அறித்தார். அதில், சென்னையில் ரூ.1200 கோடி மதிப்பீட்டில் 20 லட்சம் சதுர அடி பரப்பளவில் புதிய தலைமைச் செயலகம் கட்டப்படும் என்றும் அவர் அறிவித்தார்.

முதல்வர் விஜய் பேசுகையில், "புனித ஜார்ஜ் கோட்டையானது கிழக்கிந்திய கம்பெனியால் 1640-ஆம் ஆண்டு சென்னையில் வணிக செயல்பாட்டு மையத்திற்காக வாங்கப்பட்ட நிலத்தில் கட்ட ஆரம்பிக்கப்பட்டு 1644-ஆம் ஆண்டு கட்டி முடிக்கப்பட்டது. 1652-ல் பிரசிடென்சி நிலைக்கு உயர்த்தப்பட்ட பிறகு பிரிட்டிஷ் ஆட்சியின் அதிகாரப்பூர்வ தலைமையிடமாகத்திகழ்ந்தது. சுதந்திரத்திற்குப் பிறகு இது தமிழ்நாடு அரசின் தலைமைச் செயலகமாகத் தொடர்ந்து செயல்பட்டு வருகிறது.

ஏறத்தாழ நானூறு ஆண்டுகளாக தமிழ்நாடு அரசின் நிர்வாக மையமாகவும்,மாநிலத்தின் ஆட்சிப் பாரம்பரியத்தின் அடையாளமாகவும் விளங்கிவருகிறது. சுமார் 107 ஏக்கர் பரப்பளவைக் கொண்ட இவ்வளாகத்தில், தமிழ்நாடு அரசின் கட்டுப்பாட்டின்கீழ் தலைமைச் செயலகத்தின் பயன்பாட்டிற்காக சுமார் நான்கு ஏக்கர் நிலப்பரப்பு மட்டுமே உள்ளது. மீதமுள்ள நிலப்பரப்பு இந்தியப் பாதுகாப்புத் துறை மற்றும் இந்தியத் தொல்லியல் துறையின் (ASI) கட்டுப்பாட்டின் கீழ் இருப்பதால், இவ்வளாகத்தைவிரிவுபடுத்தவோ, மேம்படுத்தவோ முடியவில்லை.

தற்போது தலைமைச் செயலகம் இரண்டு கட்டடங்களில் செயல்பட்டு வருகிறது.

தலைமைச் செயலகப் பிரதானக் கட்டிடமாக அறியப்படும் புனித ஜார்ஜ் கோட்டை, ஆளுநரின் இருப்பிடமாகக் கட்டப்பட்ட இக்கட்டடம் தற்போது சட்டமன்றம், முதல்வர்,அமைச்சர்கள் மற்றும் தலைமைச் செயலாளர் அறைகள், நிதித்துறை மற்றும் பிற முக்கியத் துறைகள் அங்கு செயல்பட்டு வருகின்றன. இவ்வளாகம் 2 இலட்சத்து 7 ஆயிரம் சதுர அடி பரப்பளவில் அமைந்துள்ளது.

மாநில அரசின் விரிவடைந்துவரும் நிர்வாகத் தேவைகளைப் பூர்த்திசெய்யும் நோக்கில், நாமக்கல் கவிஞர் மாளிகை 1978-ஆம் ஆண்டு 3 இலட்சத்து 75 ஆயிரம் சதுரடி பரப்பளவில் தரைத்தளம் மற்றும் 10 தளங்களுடன் கட்டப்பட்டது. இக்கட்டடங்களில் 30-க்கும் மேற்பட்ட அரசுத்துறைகளின் அரசு செயலாளர்கள், அலுவலர்கள் மற்றும் 6,000-க்கும் மேற்பட்ட பணியாளர்கள் பணிபுரிந்து வருகின்றனர்.

இடப்பற்றாக்குறையின் காரணமாக நிர்வாக நலனைக் கருதி ஓமந்தூரார் அரசினர் தோட்டத்தில் புதிய தலைமைச் செயலகம் கட்டப்பட்டது.பின்னர், அக்கட்டிடமானது பல்நோக்கு மருத்துவமனை மற்றும் மருத்துவக் கல்லூரியாக மாற்றப்பட்டதால் தலைமைச் செயலகம் தொடர்ந்து கோட்டை வளாகத்திலேயே செயல்பட்டு வருகிறது.

கடந்த 40 ஆண்டு காலங்களில் தலைமைச் செயலகத்தின் அனைத்து அரசுத் துறைகளின் பணியாளர்களின் எண்ணிக்கையும், நிர்வாகப் பொறுப்புகளும் குறிப்பிடத்தக்க வகையில் உயர்ந்துள்ளன. இருப்பினும், தற்போதைய கட்டமைப்புகள் பெரும்பாலும் மாற்றப்படாமல் இருப்பதால் தேக்கநிலையை அடைந்துள்ளது. மேலும், புனித ஜார்ஜ் கோட்டையிலுள்ள மீதமுள்ள இடங்கள் Defence மற்றும் ASI நிலமாக இருப்பதினால் கூடுதல் கட்டடங்களும் மேம்பாட்டுப் பணிகளும் மேற்கொள்ள முடியவில்லை.

புனித ஜார்ஜ் கோட்டை தமிழ்நாடு அரசின் நிர்வாக வரலாற்றின் பெருமைமிக்க அடையாளமாக விளங்கி வந்தாலும், தமிழ்நாட்டின் எதிர்கால நிர்வாக வளர்ச்சிக்கும், திறன்மிக்க நிர்வாகத்திற்கும், உலகத்தரத்திலான பொது நிர்வாக உள்கட்டமைப்பை உருவாக்கும் நோக்கிலும் ஒருங்கிணைந்த புதிய தலைமைச் செயலக வளாகம் அமைப்பது இன்றியமையாதது. புதிய தலைமைச் செயலகக் கட்டிடத்தில் அனைத்து அரசுத் துறைகளையும் ஒரே நிர்வாக வளாகத்தில் கொண்டுவந்து ஒருங்கிணைக்கப்படும்.

தீயணைப்பு வசதிகள், மாற்றுத்திறனாளிகள் சென்றுவர வசதிகள் மற்றும் பசுமைக் கட்டட தரநிலைகளுக்கு உட்பட்டு நவீன நிர்வாக வளாகம் உருவாக்கப்படும். போதுமான வாகன நிறுத்துமிடங்கள், மாநாட்டு அரங்குகள், பொதுமக்கள் சேவை மையங்கள் மற்றும் அலுவலர்களுக்கான நவீன வசதிகள் ஏற்படுத்தப்படும்.

புனித ஜார்ஜ் கோட்டையின் பாரம்பரியக் கட்டடங்களை வரலாற்று மரபுச் சின்னங்களாகப் பாதுகாத்து, அவற்றின் பாரம்பரிய மதிப்பை வருங்காலத் தலைமுறைகளுக்கு அறியும் வகையில் உருவாக்கப்படும்.

இவற்றைக் கருத்தில்கொண்டு அடுத்த நூறாண்டுகளின் தேவையைப் பூர்த்திசெய்யும் வகையில், நவீன வசதிகளுடன்கூடிய சட்டமன்றம் மற்றும் தலைமைச் செயலகம் அடங்கிய புதிய கட்டிட வளாகம் சென்னையில் 20 இலட்சம் சதுர அடி பரப்பளவில் ரூபாய் 1,200 கோடி மதிப்பீட்டில் உருவாக்கப்படும்." என்று அறிவித்தார்.

# "த.வெ.க. ஆட்சியின் 116 நாட்களில் தமிழ்நாடு ரிவர்ஸ் கியரில் சென்றுவிட்டது.." எதிர்க்கட்சி தலைவர் உதயநிதி பேச்சு



திராவிட மாடல் ஆட்சியில் சட்டம் ஒழுங்கு சிறப்பாக இருந்ததாக ஒப்புக்கொண்ட தவெக அரசுக்கு நன்றி என்று எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் தெரிவித்தார்.

தமிழக சட்டசபையில் கடந்த மாதம் (ஆகஸ்டு) 5-ந் தேதி 2026-2027-ம் ஆண்டுக்கான பொது பட்ஜெட்டும், 6-ந் தேதி வேளாண் பட்ஜெட்டும் தாக்கல் செய்யப்பட்டன. தொடர்ந்து, ஆகஸ்டு 7, 10,11 ஆகிய தேதிகளில் பட்ஜெட் மீதான விவாதமும், 12-ந் தேதி நிதி அமைச்சர் மரிய வில்சன், வேளாண் அமைச்சர் வினோத் ஆகியோரின் பதில் உரையும் இடம் பெற்றது.

இந்த நிலையில், ஆகஸ்டு 17-ந் தேதி முதல் துறை வாரியாக மானியக் கோரிக்கை விவாதம் நடைபெற்று வருகிறது. இதுவரை, 43 துறைகள் மீதான மானியக் கோரிக்கை விவாதம் நடந்து முடிந்துள்ளது. இந்த நிலையில், முதல்-அமைச்சர் கையில் உள்ள முக்கிய துறையான காவல்,தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறை மீதான மானியக் கோரிக்கை விவாதம் தொடங்கி நடைபெற்று வருகிறது.

காலை 9.30 மணிக்கு தமிழக சட்டசபை கூடியதும், முதலில் கேள்வி நேரம் எடுத்துக்கொள்ளப்பட்டது. கேள்வி நேரம் முடிந்ததும், காவல், தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறை மீதான மானியக் கோரிக்கை விவாதம் தொடங்கியது.

இந்த விவாதத்தில், எதிர்க்கட்சி தலைவர் உதயநிதி ஸ்டாலின் பேசியதாவது:-

திமுக ஆட்சியில் டாப் கியரில் சென்ற தமிழ்நாடு, தவெக ஆட்சியின் 116 நாட்களில் ரிவர்ஸ் கியரில்சென்றுகொண்டு இருக்கிறது.

எங்கள் ஆட்சியில் குற்றங்கள் குறைந்திருப்பதாக தற்போது வழங்கப்பட்டுள்ள கொள்கை விளக்க குறிப்பில் பக்கம் 293, 295, 296-தெரிவிக்கப்பட்டுள்ளது. ஜாதிய பாகுபாடு கொலைகள் குறைந்திருப்பதாகத் தெரிவித்திருக்கிறீர்கள். எனவே, எங்கள் ஆட்சியில் சட்டம் ஒழுங்கு நன்றாக இருந்ததாக ஒப்புக்கொண்டதற்கு நன்றி

116 நாள் ஆட்சியில், பெண்களுக்கு பெரிய தொல்லையாக உள்ளது. கறிக்கடையில் இல்லாத அளவிற்கு தமிழகத்தில் தினமும் வெட்டு குத்து நடக்கிறது. ஆட்சிக்கு வந்த பின் 10 ஆணவக்கொலை நடந்துள்ளது. அதற்கும் பெயர் மாற்றிவிட்டனர்.

116 நாட்களில் 8 சிறை மரணங்கள்; நீதியும் கிடைக்கவில்லை, குறைந்தபட்சம் Sorryயும் கிடைக்கவில்லை.

பல்வேறு வாக்குறுதிகளை அளித்தீர்கள், நிறைவேற்றவில்லை. தாய்மாமன் தங்கமோதிரம் திட்டம் என்று சொன்னீர்கள். இந்த அரசின் திட்டங்களை தாய்மாமன் காதுகுத்தும் திட்டம் என்று சொல்லிவிடலாம். திட்டங்கள் மக்களை ரீச் ஆவதைவிட, போடும் ரீல்ஸ் ரீச் ஆனால் போதும் என நினைக்கிறார்கள்.

மக்கள் எங்களுக்கு கேள்வி கேட்கும் பொறுப்பை வழங்கி இருக்கிறார்கள். சரியான கேள்வியைக் கேட்டு உங்களிடம் பதில் வாங்க வேண்டிய இடத்தில் நாங்கள் இருக்கிறோம்.

எனவே, லாஜிக்கே இல்லாத குட்டி கதைகள் சொல்லாமல் முதலமைச்சர் நேரடியாகப் பதிலைச் சொல்ல வேண்டும். ரீல்ஸ் கண்டெண்டுக்காக இல்லாமல்; ரோல் கேமரா ஆக்ஷன் இல்லாமல் டேக் டைவர்ஷன் இல்லாமல் பதிலளிக்க வேண்டும்.

இவ்வாறு அவர் கூறினார்.

தொடர்ந்து தி.மு.க. ஆட்சியில் கொண்டு வந்த திட்டங்கள் நிறுத்தப்பட்டத்தை உதயநிதி ஸ்டாலின் பட்டியலிட்டார்.

கடந்த 116 நாட்களில் 200 கொலைகள், 500 பாலியல் வன்கொடுமைகள் நடந்துள்ளன.

த.வெ.க.ஆட்சியில் சட்டம் இருக்கு ஒழுங்கு இல்லை; கடந்த காலத்தில் குற்றநிகழ்வுகளுக்கு அரசு காரணம் என கூறிய கட்சி, ஆட்சிக்கு வந்த பிறகு தனி நபர்கள்தான் காரணம் என மக்களுக்கு பாடமெடுக்கின்றனர்.

இவர்களை வெளிப்படையாக விமர்சனம் செய்யும் பாஜகவினர் கைதாகவில்லை, ஏன் அவர்கள் மீது புகார் கூட கொடுப்பதில்லை. எங்களுக்கு வந்தால் ரத்தம், அவர்களுக்கு வந்தால் தக்காளி சட்னியா. பாஜக அடித்தாலும், வலித்தாலும் வெளியில் சொல்ல கூடாது என்கிற ஆளுங்கட்சியின் இந்த அரசியல் வியூகத்தை இதுவரை நாங்கள் கேட்டதும் இல்லை, பார்த்ததும் இல்லை.


செய்திகள்

உடனுக்குடன் படிக்க

தினத்தளம்

DHINATH DHALAM

வாட்ஸ் அப் குருப்பில் இணையுங்கள்

Join my WhatsApp group.
https://chat.whatsapp.com/CgGZM7snNtZ0QMr6or5zVx?mode=wwt


# தமிழகம் முழுவதும் ரேஷன் கடைகளில் ரூ.35க்கு வெங்காய விற்பனை தொடக்கம்



சென்னை: வெங்காய விலை உயர்வைக் கட்டுப்படுத்த கிலோ ரூ.35-க்கு வெங்காய விற்பனையை அமைச்சர்கள் வெங்கடரமணன் மற்றும் காந்திராஜன் ஆகியோர் இன்று தொடங்கி வைத்தனர்.

இது குறித்து தமிழக அரசு வெளியிட்ட செய்திக் குறிப்பு: தமிழக முதல்வரின் அறிவுறுத்தலின்படி, கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை மூலம் பொது மக்களுக்கு தரமான வெங்காயம் குறைந்த விலையில் தடையின்றிக் கிடைக்கும் வகையில் சந்தை குறுக்கீட்டு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

வெளிச்சந்தையில் அத்தியாவசியப் பொருளான வெங்காயத்தின் விலை உயர்ந்து வருவதைக் கட்டுப்படுத்தவும், ஏழை மற்றும் நடுத்தரக் குடும்பங்களின் பொருளாதாரச் சுமையைக் குறைக்கவும் தமிழ்நாடு அரசு பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது.

இதற்காக, தேசிய வேளாண்மை கூட்டுறவு விற்பனை இணையம் (NAFED) மற்றும் தேசிய கூட்டுறவு நுகர்வோர் கூட்டமைப்பு (NCCF) ஆகியவற்றின் மூலம், முதற்கட்டமாக 1,000 மெட்ரிக் டன் வெங்காயம் மகாராஷ்டிர மாநிலம், நாசிக்கில் இருந்து தமிழ்நாடு அரசால் கொள்முதல் செய்யப்பட்டுள்ளது.

அதன்படி, (செப்.3) முதல் குடும்ப அட்டை ஒன்றுக்கு ஒரு கிலோ வீதம், கிலோ ரூ.35/- என்ற மானிய விலையில் தமிழ்நாடு முழுவதும் வெங்காயம் விற்பனை செய்யப்படும்.

நகர்ப்புறப் பகுதிகளில் உள்ள நியாயவிலைக் கடைகள், மாவட்ட நுகர்வோர் கூட்டுறவு மொத்த விற்பனைப் பண்டகசாலைகள், பிரதம கூட்டுறவு பண்டகசாலைகள், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தால் நடத்தப்படும் சில்லறை விற்பனை நிலையங்கள் மற்றும் பண்ணை பசுமைக் கடைகள் உள்ளிட்ட மொத்தம் 8,914 கடைகள் மூலம் பொதுமக்களுக்கு வெங்காயம் விற்பனை செய்யப்படும்.

இதற்கான முதல் விற்பனையை உணவு மற்றும் உணவுப் பொருள் வழங்கல் துறை அமைச்சர் ப.வெங்கடரமணன் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் வ.காந்திராஜன் ஆகியோர் சென்னையில், திருவல்லிக்கேணி நகர கூட்டுறவு சங்கத்தின் கட்டுப்பாட்டின் கீழ் இயங்கும் டி.டி.கே. சாலையில் உள்ள நியாய விலைக் கடையில் தொடங்கி வைத்தார்கள்.



தென்காசி மாவட்டம் வாசுதேவநல்லூர் அருகே நெற்கட்டும் செவ்வலில் ஆங்கிலேயர் ஆதிக்கத்தை எதிர்த்துப் போராடிய தமிழ் மண்ணின் மாவீரர் பூலித் தேவரின் அவரது திருவுருவச் சிலைக்கு ஆலங்குளம் ஒன்றிய சேர்மன் எம் திவ்யா மணிகண்டன் மாலை அணிவித்து மரியாதை செய்தார்

## பாளையங்கோட்டையில் உள்ள மணிவாசகம் நடுநிலைப்பள்ளியில் சில்ரன் சேரிட்டபிள் டிரஸ்ட் சார்பில் தீ பந்து வழங்கும் விழா

பாளையங்கோட்டையில் உள்ள மணிவாசகம் நடுநிலைப் பள்ளியில் சில்ரன் சேரிட்டபிள் டிரஸ்ட் சார்பில் "சமூக தீ பாதுகாப்பு மற்றும் அவசரகால முன்னெச்சரிக்கை விழிப்புணர்வு" நிகழ்ச்சி அண்மையில் சிறப்பாக நடைபெற்றது.

நிகழ்ச்சியின் நோக்கம், மாணவர்கள் மற்றும் பொது மக்களிடையே தீ விபத்துகளைத் தடுக்கும் விழிப்புணர்வை ஏற்படுத்துவதும், அவசரகாலங்களில் எவ்வாறு செயல்பட வேண்டும் என்பதை எடுத்துரைப்பதுமாகும். இதில் தீ பாதுகாப்பு குறித்த பயனுள்ள விளக்கங்கள் வழங்கப்பட்டதுடன், தீவிபத்துகளை ஆரம்ப நிலையிலேயே கட்டுப்படுத்த உதவும் பந்துகள் பள்ளிக்கு வழங்கப்பட்டன.



பள்ளி நிர்வாகம், ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள் இந்த முயற்சியை பாராட்டி, சமூக நலனுக்காக தொடர்ந்து இதுபோன்ற விழிப்புணர்வு நிகழ்ச்சிகளை நடத்தி வரும் சில்ரன் சேரிட்டபிள் டிரஸ்ட்க்கு நன்றியைத் தெரிவித்தனர்.

இந்நிகழ்ச்சி மாணவர்களிடம் தீ பாதுகாப்பு குறித்த விழிப்புணர்வையும், அவசர காலங்களில் தன்னம்பிக்கையுடன் செயல்படும் மனப்பான்மையையும் வளர்த்தது



டாக்டர் கே. சங்கர் – சிறுநீரக அறுவை சிகிச்சை நிபுணர், அப்போலோ சிறப்பு மருத்துவமனை, மதுரை
டாக்டர் ஜே. அருண் குமார் – சிறுநீரக அறுவை சிகிச்சை நிபுணர், அப்போலோ சிறப்பு மருத்துவமனை, மதுரை
டாக்டர் வி. ஸ்ரீதர் – மூத்த இருதய அறுவை சிகிச்சை நிபுணர், அப்போலோ சிறப்பு மருத்துவமனை, மதுரை
டாக்டர் பி. அருண் பிரசாத் – சிறுநீரக மருத்துவ நிபுணர், அப்போலோ சிறப்பு மருத்துவமனை, மதுரை
டாக்டர் ஆர். சரவணன் – சிறுநீரக மருத்துவ நிபுணர், அப்போலோ சிறப்பு மருத்துவமனை, மதுரை
டாக்டர் பி. ஷோபனா – மருத்துவப் பிரிவுத் தலைவர் (மருத்துவ சேவைகள்), அப்போலோ சிறப்பு மருத்துவமனை, மதுரை

### கோவை சிவாஜி காலனி பகுதியில் உள்ள வழக்கறிஞர் புஸ்பாணந்தம் இல்லத்தில்,

## பெத்லஹேம் ஜாய் ஜெபவீட்டின் சார்பாக குடும்ப ஆசீர்வாத ஜெபக்கூட்ட நிகழ்ச்சி நடைபெற்றது

### இதில் பலர் கலந்து கொண்டு கிறிஸ்தவ பாடல்கள் பாடி வழிபாடு நடத்தினர்



கோவை சிவாஜி காலனி பகுதியில் வழக்கறிஞர் புஸ்பாணந்தம் அலுவலகம் மற்றும் வீடு அமைந்துள்ளது இங்கு, பெத்லஹேம் ஜாய் ஜெபவீட்டின் சார்பாக, குடும்ப ஆசீர்வாத ஜெபக்கூட்ட நிகழ்ச்சி நடைபெற்றது இதனை தொடர்ந்து வழக்கறிஞர்களின் பெண் குழந்தைகளான வர்ஷா வர்ஷினி ஆகியோரது பிறந்தநாள் விழா கொண்டாடப்பட்டது. இந்த கூட்டத்தில் சிறப்பு ஆராதனை நிகழ்ச்சி, பைபிள் வசனங்கள், பாடல்கள் பாடப்பட்டு சிறப்பு வழிபாடு நடைபெற்றது இதனை தொடர்ந்து, இக்கூட்டத்தில் கலந்து கொண்ட அனைவரது குடும்ப உறுப்பினர்கள் அனைவரும், நோய் நொடியின்றி, வாழ வேண்டும். அதற்க்கு உண்டான அனைத்து தேவைகளையும் கர்த்தராகிய இயேசு கிறிஸ்து செய்து தர வேண்டும் என்று கேட்டு கொள்ள பட்டது. தொடர்த்து தேவ துதி பாடல்கள், சிறப்பு ஆராதனைகள் நடைபெற்றது. பைபில் வாசகங்களில் உள்ள முக்கிய குறிப்புகளை எடுத்து போதகர் பாடல்கள் பாடி இந்த விஷேச ஆராதனையை வழி நடத்தினர். இந்த நிகழ்ச்சியில் போதகர் ஜான் பீட்டர், ஜாய்ஸ் உதவி போதகர் ஜெயக்குமார், மெர்ஸி, மூப்பர் சந்திரன், கங்கா, சகோதரர் ராஜேஷ், சத்யா, உமா, ஞானமணி, மகேஷ்வரி, ராதிகா, சீயோன் தேவசபை விசுவாசிகள் சுமதி, டெய்ஸி, எலிசபெத், வசந்தாமணி, இன்கம் டாக்ஸ் மோனிஷ், லட்சுமி மற்றும்பலர்கலந்துகொண்டனர் என்பது குறிப்பிடத்தக்கது.

### புதிய கார் வாங்க திட்டமா?

## கோவையில் 500க்கும் மேற்பட்ட பயன்படுத்தப்பட்ட கார்கள் ஒரே இடத்தில் கண்காட்சி மற்றும் விற்பனைக்கு உள்ளது வரும் 4ம் தேதி முதல் 10ம் தேதி வரை நடைபெற உள்ளது




கோவையில் புதிய கார் வாங்க திட்டமிடு பவர்களுக்கு பயனளிக்கும் வகையில், 500"க்கும் மேற்பட்ட பயன்படுத்தப்பட்ட கார்கள் ஒரே இடத்தில் இடம்பெறும் 10-வது மாபெரும் Used Cars மாநாடு நடைபெற உள்ளது. கார்ஸ் 327" நிறுவனத்தின் இரண்டாம் ஆண்டுநிறைவுவிழாவை முன்னிட்டு ஏற்பாடு செய்யப்பட்டுள்ள இந்த நிகழ்வு, செப்டம்பர் 4 முதல் 10-ஆம்தேதி வரை நடைபெறுகிறது.

காலை 9.30 மணி முதல் இரவு 8 மணி வரை, கோவை பட்டணம் பகுதியில் உள்ள எல்அன்ட் டி பைபாஸ் சாலையில் அமைந்துள்ள "கார்ஸ்327" வளாகத்தில் இந்த மாநாடு நடைபெறுகிறது.

பல்வேறு வகையான பயன்படுத்தப்பட்ட கார்களை ஒரே இடத்தில் பார்வையிட்டு, தங்களது தேவைக்கும் பட்ஜெட்டுக்கும் ஏற்ற காரை தேர்வு செய்யும் வாய்ப்பு வாடிக்கையாளர்களுக்கு வழங்கப்படுகிறது.

மேலும், கார்களை வாங்கும் வாடிக்கையாளர்களுக்கு சில்வர் காய்ன் லக்கி ட்ராவ் மூலம் சிறப்பு பரிசுகள், சிறப்பு சர்விஸ் உள்ளிட்ட சலுகைகள் வழங்கப்படுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. குடும்பத்துடன் நேரில் சென்று கார்களை பார்வையிட்டு, விலை மற்றும் வசதிகளை ஒப்பிட்டு, தங்களுக்கு ஏற்ற காரை தேர்வு செய்ய இது ஒரு வாய்ப்பாக அமையும் என கார்ஸ் 327 நிறுவனதிதின் உரிமையாளர் விஷ்ணு வேணுகோபால் தெரிவித்துள்ளார்.

## பழைய பகையால் ஆத்திரமடைந்த நபர் அட்டகாசம்: பூட்டிய வீடுகள், ஜன்னல் கதவுகள் அடித்து உடைப்பு போச்சம்பள்ளியில் பரபரப்பு!



கிருஷ்ணகிரி மாவட்டம் போச்சம்பள்ளி அடுத்த முருக்கம்பட்டி கிராமத்தில், பழைய முன்விரோதம் காரணமாக பூட்டியிருந்த வீட்டின் மீது நபர் ஒருவர் தாக்குதல் நடத்தி சொத்துக்களை சேதப்படுத்திய சம்பவம் அப்பகுதியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

முருக்கம்பட்டி கிராமத்தைச் சேர்ந்த சிவக்குமார் என்பவர் தற்போது தேனியில் டீக்கடை நடத்தி வருகிறார். இவர் கடந்த 8 ஆண்டுகளுக்கு முன்பு மாதப்பன் என்பவரிடமிருந்து தற்போதைய வீட்டை விலைக்கு வாங்கி குடியிருந்து வருகிறார். இதற்கு முன்னதாக, சுமார் 10 ஆண்டுகளுக்கு முன்பு இந்த வீட்டின் அப்போதைய உ ரிமையாளரான மாதப்பனுக்கும், அதே ஊரைச் சேர்ந்த அருள் என்பவருக்கும் இடையே தகராறு ஏற்பட்டுள்ளது.

அப்போது அருள், மாதப்பனின் வீட்டு மின் மீட்டரைச் (Electricity Meter) சேதப்படுத்தியதாகக் கூறப்படுகிறது. இது தொடர்பாக ஊர் சார்பாக அருள் மீது வழக்கு தொடரப்பட்டு, நீதிமன்றத்தில் வழக்கு நிலுவையில் இருந்து வந்துள்ளது. இந்நிலையில், நிலுவையில் உள்ள மின் மீட்டர் சேத வழக்கு தொடர்பாக அருள் என்பவருக்கு அண்மையில் நீதிமன்றத்திலிருந்து சம்மன் வந்துள்ளது. இதனால் கடும் ஆத்திரமடைந்த அருள், பாதிக்கப்பட்ட சிவக்குமா ருக்கும் தனக்கும் நேரடியாக எந்தவித முன்விரோதமும் இல்லாத நிலையிலும், அந்த வீட்டை சிவக்குமார் வாங்கியுள்ளார் என்ற காரணத்திற்காக பழிவாங்கும் நோக்கில் செயல்பட்டுள்ளார்.

வீட்டில் யாரும் இல்லாத நேரத்தைப் பயன்படுத்திக் கொண்ட அருள், சிவக்குமாரின் வீட்டு ஜன்னல் கதவுகள் மற்றும் கேட் உள்ளிட்டவற்றை அடித்து நொறுக்கி சேதப்படுத்தியுள்ளார்.

அத்துடன் நிறுத்தாமல், அருள் ன் மூத்த சகோதரர் மோகன்(எ)கோவிந்தராஜ் என்பவரது வீடு மற்றும் தாய் ராணி குடியிருக்கும் வீட்டையும் அடித்து உடைத்து, தகாத வார்த்தைகளால் திட்டி, வீட்டை வெளிப்புறமாக பூட்டிவிட்டுத் தப்பிச் சென்றுள்ளார்.

ஆள் நடமாட்டம் இல்லாத நேரங்களை இலக்காகவைத்தே இவர் இதுபோன்ற அட்டூழியங்களில் ஈடுபட்டு வருவதாக அப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

இச்சம்பவம் குறித்து போச்சம்பள்ளி காவல் நிலையத்தில் புகார் அளிக்கப்பட்டுள்ளது. புகாரின் பேரில் சம்பவ இடத்திற்கு விரைந்து வந்த போலீசார், சேதமடைந்த வீடுகளைப் பார்வையிட்டு தீவிர விசாரணை மேற்கொண்டு வருகின்றனர். இச்சம்பவம் அப்பகுதியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

## சிவகாசி அருகே பட்டாசு ஆலையில் வெடி விபத்து: ஒருவர் உயிரிழப்பு



சிவகாசி: சிவகாசி அருகே மீனம்பட்டியில் இயங்கிவந்த பட்டாசு ஆலையில் ஏற்பட்ட வெடிவிபத்தில் ஒருவர் உயிரிழந்த நிலையில், பெண் தொழிலாளி ஒருவர் காயமடைந்தார்.


சிவகாசியைச் சேர்ந்தவர் ஆறுமுகசாமி. இவர் மீனம்பட்டி அருகே சுந்தர்ராஜபுரத்தில் மத்திய பெட்ரோலியம் மற்றும் வெடிபொருள் கட்டுப்பாட்டு அமைப்பு (பெசோ) உரிமம் பெற்று வடிவேல் பயர் ஒர்க்ஸ் என்ற பெயரில் பட்டாசு ஆலை நடத்தி வருகிறார். இதில் 50-க்கும் மேற்பட்ட அறைகளில் 100-க்கும் அதிகமான தொழிலாளர்கள் பணிபுரிந்து வருகின்றனர்.

வழக்கம் போல் தொழிலாளர்கள் பட்டாசு உற்பத்தி செய்யும் பணியில் ஈடுபட்டிருந்தனர். அப்போது, மரத்தடியில் வைத்து திறந்தவெளியில் வெடிமருந்து கலவை செய்ததால், வேதியியல் மாற்றம் காரணமாக வெடி விபத்து ஏற்பட்டுள்ளது. இந்த விபத்தில் மரம் முற்றிலும் எரிந்து சேதமடைந்தது. விபத்தால் 100 அடி உயரத்திற்கு கரும்புகை எழுந்தது.

விபத்தில் ஸ்ரீவில்லிபுத்தூர் அருகே குன்னூரை சேர்ந்த ஈஸ்வரன் (52) என்ற தொழிலாளி சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார். மேலும் காயமடைந்த பெண் தொழிலாளி மீட்கப்பட்டு மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கப்பட்டார்.

விபத்துக் குறித்து தகவலறிந்து சம்பவ இடத்திற்கு விரைந்த சிவகாசி தீயணைப்புத்துறையினர் தீயை கட்டுப்படுத்தும் பணியில் ஈடுபட்டனர். தொடர்ந்து, விபத்து குறித்து சிவகாசி கிழக்கு போலீஸார் வழக்குப் பதிவு செய்து விசாராணை நடத்தி வருகின்றனர்.

## ஸ்ரீவில்லிபுத்தூர் மேற்கு தொடர்ச்சி மலையில் பற்றி எரியும் காட்டுத் தீ



ஸ்ரீவில்லிபுத்தூர்: ஸ்ரீவில்லிபுத்தூர் மேற்கு தொடர்ச்சி மலையில் 2-வது நாளாக பற்றி எரியும் காட்டுத்தீயால் நூற்றுக்கணக்கான ஏக்கர் பரப்பளவிலான காடுகள் தீயில் கருகின. இதனால் வனவிலங்குகள் வேறு பகுதிகளுக்கு இடம் பெயர்ந்து வருகின்றன.

ஸ்ரீவில்லிபுத்தூர் - மேகமலை புலிகள் காப்பகம் செண்பகத்தோப்பு வனப்பகுதி யில் காப்புக்காடுகள், அடர்ந்த மரங்கள், ஆண்டு முழுவதும் நீர்வரத்துள்ள ஓடைகள் உள்ளதால் யானை, சிறுத்தை, மான், சாம்பல் நிற அணில், வரையாடு உள்ளிட்ட வனவிலங்குகளின் வாழ்விடமாக உள்ளது. அரியவகை உயிரினங்கள வாழும் செண்பகத்தோப்பு வனப்பகுதி பல்லுயிர் தளமாக அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

ஸ்ரீவில்லிபுத்தூர் வனச்சரகம் அழகர் கோயில் பகுதியில் நேற்று முன்தினம் காலை காட்டுத்தீ பரவியது. செண்பகத்தோப்பு காட்டழகர் கோயில் மேற்கு பகுதியில் பற்றிய காட்டுத்தீ, மலை முழுவதும் பரவியது.

மழை இல்லாமல் வனப்பகுதி முழுவதும் வறண்டுள்ளதாலும், வெயிலின் தாக்கம் மற்றும் காற்றின் வேகம் காரணமாக காட்டுத்தீ வேகமாக பரவி, 2 வது நாளாக நேற்றும் எரிந்து கொண்டிருக்கிறது.

அடிவாரத்தில் இருந்து மலை உச்சியில் உள்ள முதலியார் ஊற்று பங்களா வரை காட்டுத்தீ எரிந்து வருகிறது. இதனால்நூற்றுக்கணக்கான ஏக்கர் பரப்பளவிலான காட்டு மரங்கள் மற்றும் மூலிகைச் செடிகள் தீயில் கருகி வீணாகின.

ஏற்கெனவே வறட்சியால் பாதிக்கப்பட்டுள்ள வனவிலங்குகள் காட்டுத்தீ காரணமாக அடிவாரப் பகுதி மற்றும் கேரள வனப்பகுதியை நோக்கி இடம் பெயர்ந்து வருகின்றன. காட்டுத்தீ மேலும் பரவுவதை தடுக்க வனத்துறை நடவடிக்கைஎடுக்கவேண்டும் என இயற்கை ஆர்வலர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

# ஈரோடு மாவட்டத்தில் மாவட்ட அளவிலான ஆதார் சேவை மையத்தை மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி திறந்து வைத்தார்



ஈரோடு மத்திய பேருந்து நிலையம் எதிர்ப்புறம்,நல்லி மருத்துவமனை சாலையில், மாவட்ட அளவிலான ஆதார்சேவைமையத்தை மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி நேற்று (3.09.2026)திறந்து வைத்தார்.

பொதுமக்கள் ஆதார் தொடர்பான சேவைகளை எளிதாகவும், விரைவாகவும் ஒரே இடத்தில் பெற்றிடும் வகையில், இந்திய தனித்துவ அடையாள ஆணையத்தால் (UIDAI) நேரடியாக இயக்கப்பட்டு, பொதுமக்களுக்கு பாதுகாப்பான, தரநிலைப்படுத்தப்பட்ட மற்றும் உயர்தர ஆதார் சேவைகளை வழங்கும் நோக்கில் இம்மையம் அமைக்கப்பட்டுள்ளது. இம்மையத்தின் மூலம் புதிய ஆதார் பதிவு, மக்கள்தொகை மற்றும் உயிர்வழி விவர ங்களைப் புதுப்பித்தல்,பிழை திருத்தம் மற்றும் குறைதீர் உள்ளிட்ட பல்வேறு ஆதார் சேவைகளை பொதுமக்கள் பெற்றுக்கொள்ளலாம். இம்மையத்தில் 4 செயல்பாட்டு கிட்கள் மூலம் சேவைகள் வழங்கப்படுகின்றன.பொதுமக்கள் ஆன்லைனில் முன்பதிவு செய்து,தங்களுக்கு ஏற்ற நேரத்தில் மையத்திற்கு நேரில் வந்து சேவைகளைப் பெற்றுக்கொள்ளலாம்.

இம்மையமானது, அரசு பொது விடுமுறை நாட்களைத் தவிர்த்து வாரத்தின் ஏழு நாட்களிலும் செயல்படும். மாற்றுத்திறனாளிகள் உள்ளிட்ட அனைத்து தரப்பினரும் எளிதில் சேவைகளைப் பெறும் வகையில் சக்கர நாற்காலி அணுகுமுறை, அணுகலுக்கு ஏற்ற கழிப்பறை மற்றும் தனிப்பட்ட குறைதீர்வசதி உள்ளிட்ட அடிப்படை வசதிகளும் ஏற்படுத்தப்பட்டுள்ளன. இம்மையத்தில் ஆதார் சேவை மைய (ASK) மேலாளர் நியமிக்கப்பட்டுள்ளதுடன், பொதுமக்களிடமிருந்து பெறப்படும் குறைகளை சம்பந்தப்பட்ட அலுவலர்களுக்கு அனுப்பி, அவற்றுக்கு விரைவாகத் தீர்வு காணும் வகையில் நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளார்.

மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் மாவட்ட அளவிலான ஆதார்சேவைமையத்தை திறந்து வைத்து, மையத்தில் ஏற்படுத்தப்பட்டுள்ள வசதிகள் மற்றும் பொதுமக்களுக்கு வழங்கப்படவுள்ள சேவைகள் குறித்து கேட்டறிந்தார்.

இந்நிகழ்வின்போது, ஆதார் நிர்வாக மேலாளர் கணேசன், ஆதார் சேவை மைய பணியாளர்கள், உட்பட துறை சார்ந்த அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.



ஈரோடு மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் எய்ட்ஸ் விழிப்புணர்வு குறித்த மனித சங்கிலி நிகழ்ச்சி மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி தலைமையில் நேற்று (3.09.2026) நடைபெற்றது.



ஈரோடு மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி ஆட்டோ வாகனத்தில் எய்ட்ஸ் விழிப்புணர்வு குறித்த ஒட்டுவில்லையினை ஒட்டி நேற்று (3.09.2026) விழிப்புணர்வு ஏற்படுத்தினார்.

# ராமநாதபுரம் மாவட்டத்தில் அக்டோபர் 31 வரை 163 தடை உத்தரவு



ராமநாதபுரம்: ராமநாதபுரம் மாவட்டத்தில் அக்.31 வரை 163 தடை உத்தரவு அமலில் இருக்கும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இதுகுறித்து ராமநாதபுரம் மாவட்ட நிர்வாகம் வெளியிட்ட செய்திக்குறிப்பு விவரம்:ராமநாதபுரம் மாவட்டத்தில் பல்வேறு தலைவர்களின் பிறந்தநாள், நினைவு நாள் மற்றும் குருபூஜை நிகழ்வுகளின்போது சட்டம்-ஒழுங்கு, பொது அமைதி மற்றும் நல்லிணக்கத்தைப் பாதுகாக்கும் வகையில் பாரதிய நாகரிக பாதுகாப்புச் சட்டம் (பிஎன்எஸ்எஸ்) பிரிவு 163-ன் கீழ் (முந்தைய சட்டப்படி பிரிவு 144) மாவட்ட நிர்வாகத்தால் தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

இமானுவேல் சேகரன் நினைவு நாள் / பிறந்தநாள் மற்றும் தேவர் குருபூஜை நிகழ்வுகளின்போது அதிகளவில் தொண்டர்கள் வாடகை வாகனங்களில் வருவதால் வழித்தடங்களில் இடையூறுகள் மற்றும் சட்டம்-ஒழுங்குப் பிரச்சினைகள் ஏற்படவாய்ப்புள்ளது என்பதால் இந்தத் தடை உத்தரவுபிறப்பிக்கப்பட்டுள்ளது.

செப்.9 முதல் 15 வரையும் அக்.9 அன்றும், அக்.25 முதல் 31 வரையும் மேற்கண்ட தலைவர்களின் பிறந்தநாள்,நினைவுநாள் மற்றும் குருபூஜை நிகழ்வுகளில் கலந்துகொள்வதற்காகதொண்டர்களை ஏற்றிக்கொண்டு பிற மாவட்டங்களிலிருந்து ராமநாதபுரம் மாவட்டத்துக்குள் வரும்அனைத்து வகையான வாடகை மற்றும் சுற்றுலா வாகனங்கள்,ஆம்னி பேருந்துகள், தற்காலிகசிறப்பு அனுமதிபெற்ற வாகனங்கள், சரக்கு வாகனங்கள், டிராக்டர்கள்,ஆட்டோக்கள், இருசக்கர வாகனங்கள் நுழைவது தடை செய்யப்படுகிறது.

மேலும் செப்.5. முதல் இரண்டு மாத காலத்துக்கு முன் அனுமதியின்றி 5 நபர் அல்லது அதற்கு மேற்பட்ட நபர்கள் கூடுதல், பொதுக்கூட்டம் நடத்துதல் மற்றும் ஊர்வலம் நடத்துவதற்குத் தடை விதிக்கப்பட்டுள்ளது. நிகழ்வுகளின்போது ஜோதி எடுத்துச்செல்வதும் தடை செய்யப்பட்டுள்ளது. நிகழ்வு நடைபெறும் இடத்திலிருந்து ஒரு கி.மீ. சுற்றளவுக்குள் மட்டும் மாவட்ட நிர்வாகத்தின் முன் அனுமதியுடன் ஜோதி எடுத்துச் செல்ல அனுமதிக்கப்படும்.

செப்.9 அன்று இமானுவேல் சேகரன் பிறந்தநாளைமுன்னிட்டு ராமநாதபுரம் மாவட்டம் முழுவதும் ஜோதி ஓட்டம் முற்றிலும் தடை செய்யப்பட்டுள்ளது. தனிப்பட்ட வாகனங்களில் பயணம் செய்வோர் அசல் ஓட்டுநர் உரிமம் மற்றும் வாகனத்தின் தொடர்புடைய ஆவணங்களைக் கட்டாயமாக வைத்திருக்க வேண்டும்.

பொதுமக்கள் மற்றும் அனைத்துத் தரப்பினரும் மாவட்ட நிர்வாகத்தின் தடை உத்தரவுகளை முழுமையாகக் கடைப்பிடிக்க வேண்டும். மேலும் நினைவு நாள், குருபூஜை நிகழ்வுகளை அமைதியான முறையில் நடத்தி மாவட்டத்தில் சட்டம்-ஒழுங்கு, பொது அமைதி மற்றும் நல்லிணக்கத்தை நிலைநாட்ட மாவட்ட நிர்வாகத்துக்கும் காவல் துறைக்கும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

# திருப்பதி தேவஸ்தான அதிகாரி வீட்டில் லஞ்ச ஒழிப்பு சோதனை: கணக்கில் வராத நகை, பணம், வெள்ளி பொருட்கள் பறிமுதல்



திருமலை: திருப்பதி தேவஸ்தான அதிகாரியின் வீடு உட்பட 5 இடங்களில் லஞ்ச ஒழிப்புத் து றை அதிகா ரிகள் சோ தனை ந டத்தினர். அப் போ து கணக்கில் வ ராத சொத்து பத்திரங்கள்,நகை,பணம் மற்றும் வெள்ளி பொருட்க ளை அதிகா ரிகள் பறிமுதல் செய்தனர்.

திரு ம லை திருப்பதி தே வ ஸ்தானத்தில் ஏழுமலை யான் கோயில் இணைநிர்வாகஅதிகாரியாக பணியாற்றி வருபவர் லோக நாதம். இவர் திருமலையில்ஏழுமலை யான் கோ யிலுக்குள் ப ணி யாற்றி வருகிறார். உ ய ர் ப தவி யில் இருக்கு ம் இவ ர் வருமானத்துக்கு அதிகமாக சொத்து சேர்த்ததாக புகார் எழுந்தது.

இது தொடர்பாக இவரின் திருப்பதி தொட்டா பு ரம் வீடு, திரு மலையில் இவருக்கென ஒது க்கப்பட்ட பி-53 குடியிருப் பு, இவரது மைத் துன ர்கள் இருவரின் வீடு , செல் லூர் கிராமத் தி ல் உள்ள உறவினர் வீ டு என மொத்தம் 5 இடங்களி ல் நேற்று சோதனை நடைபெற்றது. திருப்பதி லஞ்ச ஒழிப்புத் துறை டிஎஸ்பி ஸ்ரீநிவாச ராவ் தலைமையில் அதிகாரி கள் மற்றும் போலீஸார்இந்தசோதனையை மேற்கொண்டனர்.

மேலும், திருப்பதி எஸ் டிவி நகரில் உள்ள பாரத ஸ்டேட் வங்கியில் இவரது லாக் கரிலும் சோ தனை செ ய்தனர். இதில் பல கோடி ரூபாய் ம திப் புள்ள அசையா சொ த் துகளின் பத்திரங்கள் , தங்க, வைர நகைகள்,வீட்டு மனைபட்டாக் க ள், வெள்ளி பாத்திரங்கள், ரொக் க ம் என வருமானத் துக்கு அதிகமாக இவர் சொத்து சேர்த்துள்ளது உ று தி யாகி உள்ளது.

இதையடுத்து, கணக்கில் வரா த அனைத்தையும் அதிகாரிகள் பறிமுதல் செ ய்தனர். எனினும் அவற்றின் மதிப்பு எவ்வளவு?என்றவிவரம் உடனடியாகதெரிவிக்கப் படவில்லை.

# சங்கரன்கோவிலில் திடீரென தீப்பற்றிய அரசு பேருந்து அதிர்ஷ்டவசமாக பயணிகள் உயிர் தப்பினர்



சங்க ரன் கோவில் அருகே சென்று கொண்டிருந்த அரசு பேருந்து திடீரென தீப்பிடித்து எரிந்தது. ஓட்டுநர் மற்றும் நடத்துனரில் செயலால் பேருந்தில் இருந்த அனைவரும் அதிர்ஷ்டவசமாக உயிர் தப்பினர்.

விருதுநகர் மாவட்டம் ஸ்ரீ வி ல் லி பு த் தூ ரி ல் இருந்து இன்று திருநெல்வேலிக்கு அரசு பேருந்து புறப்பட்டுச் சென்றது. தென்காசி மாவட்டம் சங்கரன்கோவிலில்ரயில்வே கேட்டை தாண்டியபோது மின் இணைப்பு கோளாறு காரணமாக பேருந்து திடீரென தீப்பிடித்தது. பேருந்தில் இருந்து புகை மற்றும் தீ வெளியேறியதை கவனித்த ஓட்டுநர் வண்டியை உடனடியாக நிறுத்தினார். இதையடுத்து ஓட்டுநர் மற்றும் நடத்துனர் இருவரும் இணைந்து பேருந்தில் இருந்த 60 பயணிகளையும் கீழே இறக்கி விட்டனர். அவசரம் அவசரமாகபயணிகள் இறங்கிய சிறிது நேரத்திலேயே தீ குபுகுபுவென பேருந்து முழுவதும் பரவியது.

இதுகுறித்து தகவல் அறிந்த தீயணைப்பு மற்றும் மீட்பு துறையினர் சம்பவ இடத்திற்கு விரைந்து வந்து தீயை அணைத்தனர். ஆனால் பேருந்து முழுவதும் கருகிசேதமடைந்து விட்டது. ஓட்டுநர் மற்றும் நடத்துனரின் துரிதமான செயலால் பேருந்தில் இருந்த பயணிகள் அனைவரும் வெளியேற்றப்பட்டதால் உயிர்சேதம் தவிர்க்கப்பட்டது.

இந்த சம்பவத்தை காண பொது மக்கள் திரண்டதால் அப்பகுதியில் போக்குவரத்து பாதிக்கப்பட்டது.மேலும், இந்த தீ விபத்து காரணமாக சங்கரன்கோவில் போலீசார் மற்றும் தீயணைப்பு அதிகாரிகள் விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

# ‘நிரப்பப்படாத 40 மருத்துவ இடங்கள் தமிழகத்திடம் ஒப்படைக்கப்படும்’ சுப்ரீம் கோர்ட்டில் மத்திய அரசு உறுதி



தமிழ்நாட்டின் உயர் சிறப்பு மருத்துவ படிப்புக்கான 152 இடங்களை அகிலஇந்தியஇட ஒதுக்கீடுக்கு ஒப்படைக்க தடைகோரும் மனுவையும்,காலியாக உள்ள 151 உயர் சிறப்பு மருத்துவ இடங்களை அகில இந்திய ஒதுக்கீட்டுக்கு ஒப்படைக்க பிறப்பித்த உத்தரவை மாற்றி அமைக்க கோரியும் தமிழ்நாடு மருத்துவ அலுவலர்கள் சங்கம் சார்பில் சுப்ரீம் கோர்ட்டில் தாக்கல் செய்யப்பட்ட மனு நீதிபதி சி.எஸ்.நரசிம்மா, நீதிபதி ஆலோக் ஆராதே ஆகியோர் அடங்கிய அமர்வில் இன்று மீண்டும் விசாரணைக்கு வந்தது.

கடந்த முறை இந்த மனு தொடர்பான விசாரணையின்போது,தமிழ்நாடு மாநிலத்தால் ஒப்படைக்கப்பட்ட 152 இடங்களில் சுமார் 40 இடங்கள் காலியாக உள்ளதாக மத்திய அரசு தெரிவித்திருந்தது. இந்நிலையில்,இன்று நடைபெற்ற விசாரணையின்போது, நிரப்பப்படாத 40 இடங்களை மீண்டும் தமிழ்நாடு அரசிடம் ஒப்படைக்க மத்திய அரசு தயாராக இருப்பதாக மத்திய அரசு தரப்பில் தெரிவிக்கப்பட்டது. இந்த விவகாரத்தில், மீண்டும் ஒரு கலந்தாய்வு நடத்தி அந்த இடங்களை ஒப்படைக்க தயாராக இருப்பதாக மத்திய அரசு சுப்ரீம் கோர்ட்டில் தெரிவித்துள்ளது குறிப்பிடத்தக்கது.

## "சென்னை உயர்நீதிமன்றத்தில் தமிழ் முதன்மை மொழி" பேரவையில் தனித்தீர்மானம் நிறைவேற்றம்



சென்னை: தமிழை சென்னை உயர் நீதிமன்றத்தின் முதன்மையான நீதிமன்ற மொழியாக அங்கீகரிக்க வேண்டுமென்றும், உயர் நீதிமன்றத்தில் வழங்கப்படும் தீர்ப்புரைகள், தீர்ப்பாணைகள் மற்றும் நீதிமன்ற உத்தரவுகள் அனைத்தும் தமிழில் வழங்கும் கட்டமைப்பை உருவாக்க வேண்டுமென்றும் சட்டப்பேரவையில் முதல்வர் விஜய் கொண்டு வந்த தனித்தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

மேலும், அரசியமைப்புச் சட்ட Article 348(2) மற்றும் ஆட்சி மொழிகள் சட்டம்,1963,பிரிவு 7 ஆகியவற்றின் கீழ் மாநில ஆளுநரால் அனுப்பப்படும் முன்மொழிவுகளின் மீது தேவையான அனைத்து சட்ட நடவடிக்கைகளையும் உடனடியாக மேற்கொள்ள வேண்டுமென்றும் ஒன்றிய அரசை வலியுறுத்தி அரசினர் தனித் தீர்மானத்தை முன்மொழிந்து முதல்வர் விஜய் உரையாற்றினார்.

தீர்மானத்தை முன்மொழிந்து முதல்வர் விஜய் பேசுகையில், "சென்னை உயர் நீதிமன்றத்தின் முதன்மை மொழியாக தமிழை அங்கீகரிக்க வேண்டும். உயிரோடும் உணர்வோடும் ஒன்றிணைந்தது எனக் கருதுகிறோம்; சிறப்புமிக்க தமிழ் மொழியானது ஆட்சி, கல்வி, மாவட்ட நீதிமன்றங்களிலும் பயன்படுத்தப்பட்டு வருகிறது. சென்னை உயர் நீதிமன்றத்திலும் தமிழை முதன்மை மொழியாக அறிவிப்பது காலத்தின் கட்டாயம்; மாநிலத்தின் ஆட்சி மொழியை உயர் நீதிமன்ற நடவடிக்கையில் பயன்படுத்த அதிகாரம் வழங்க முடியும்.

நீதிமன்ற தீர்ப்பு மற்றும் உத்தரவுகள் அனைத்தையும் தமிழில் வழங்கும் கட்டமைப்பை உருவாக்க வேண்டும். தமிழில் மனுக்கள், ஆவணங்களை சமர்ப்பிக்க உரிய நடைமுறை உருவாக்கப்பட வேண்டும்.

நீதிபதிகள், வழக்கறிஞர்கள், நீதிமன்ற பணியாளர்களுக்கு சட்டத் தமிழ் மற்றும் மொழிபெயர்ப்பு பயிற்சி அளிக்கப்பட வேண்டும். மாவட்ட நீதிமன்றங்களில் தமிழ் வழக்காடு மொழியாக உள்ளது. வழக்கு தொடர்பான வாதங்கள் தமிழில் இருந்தால் எளிதாக புரியும். இந்த கோரிக்கை எந்த மொழிக்கும் எதிரானது அல்ல.

தமிழ் மொழிக்கான சட்ட அங்கீகாரம் கேட்கும் கோரிக்கை. குடியரசுத் தலைவரும், மத்திய அரசும் இதற்கு ஒப்புதல் தர வேண்டும். இப்பேரவை ஒருமனதாக இந்த வரலாற்று சிறப்புமிக்க தீர்மானத்தை நிறைவேற்றி, சென்னை உயர் நீதிமன்றத்தில் தமிழை முதன்மை மொழியாக பயன்படுத்துவதற்கான நடவடிக்கையை மத்திய அரசு மேற்கொள்ள வேண்டும்" என்றார்.

இந்தத் தீர்மானம் மீது பல்வேறு கட்சி உறுப்பினர்களும் உரையாற்றிய பின்னர் தீர்மானம் ஒருமனதாக நிறைவேற்ற ப்பட்டது.

## என் தோட்டத்தில் மின் வயர்கள் திருட்டு சட்டசபையில் எடப்பாடி பழனிசாமி பேச்சு



சேலம் மாவட்டம் சிலுவம்பாளையத்தில் என்னுடைய தோட்டத்தில் 2 நாட்களுக்கு முன், போர்வெல் இயக்க அமைக்கப்பட்டிருந்த மின்வயர்களை திருடிச் சென்றுவிட்டனர் என எடப்பாடி பழனிசாமி கூறினார்.

தமிழ்நாடு சட்டசபையில் காவல்துறை மானியக்கோரிக்கை மீதான விவாதம் நடைபெற்றது. அப்போது அதிமுக பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி பேசியதாவது:- காவல்துறை மாநில வளர்ச்சிக்கு முக்கியமான துறை.கொரோனா காலகட்டத்தில் காவல்துறையினர் சிறப்பாக பணியாற்றினர். அவர்களால் பல உயிர்கள் காக்கப்பட்டது. பணி ஓய்வுக்கு ஓராண்டுக்கு முன்பே பணியிடத்தை நிரப்பநடவடிக்கை தேவை. 29,108 காவலர்கள் புதிதாக நியமனம் என்பது போதுமானது அல்ல.

625 பேருக்கு ஓர் காவலர் என்பது போதுமானது அல்ல. காவலர்கள் எண்ணிக்கை அதிகரித்தால்தான் தமிழ்நாடு பூங்காவாக திகழும். மக்கள் தொகை எண்ணிக்கைக்கு ஏற்ப காவலர்கள் எண்ணிக்கையை அதிகரிக்க வேண்டும்

அதிமுக ஆட்சியில் முறையாக பதவி உயர்வு

அதிமுக ஆட்சியில் பெண்கள் பாதுகாக்கப்பட்டனர். சட்டம், ஒழுங்கு சீராக இருந்தது. அதிமுக ஆட்சியில் சென்னை பாதுகாப்பான நகரமாக இருந்தது. அதிமுக ஆட்சிக் காலத்தில் குற்றத்தை சமாளிக்க கணினி வழி புதிய பிரிவு ஏற்படுத்தினோம். அதிமுக ஆட்சியில் காவலர்களுக்கு முறையாக பதவி உயர்வு வழங்கினோம்.

அதிமுக ஆட்சியில் சட்டத்தின் ஆட்சி நிலைநாட்டப்பட்டது.

காவலர்களுக்குவாரம் ஒரு நாள் விடுமுறை அளிக்கப்படும் என தவெக அளித்த வாக்குறுதியை நிறைவேற்ற வேண்டும். காவல் ஆய்வாளர்கள் பலர் ஓய்வு பெற உள்ளனர். அவர்களுக்குதகுதி அடிப்படையில் பணி உயர்வு வழங்க வேண்டும்.

சிறப்பு புத்தாக்க பயிற்சி பெண் காவலர்களை இரவு நேரங்களில் பாதுகாப்பு பணிக்கு ஈடுபடுத்தப்படுவதை தவிர்க்க வேண்டும். காவலர்களின் மன அழுத்தத்தை குறைக்க அதிமுக ஆட்சியில் அளித்தது போல தவெகவும் சிறப்பு புத்தாக்க பயிற்சி அளிக்க வேண்டும். காவல் நிலையங்களின் உள்ளே 24 மணி நேரமும் சிசிடிவி கேமராக்கள் செயல்பட நடவடிக்கை எடுக்க வேண்டும். சாலைகளில் உள்ள சிசிடிவி-களில் தூசுகள் படிந்து பதிவுகள் முறையாக கிடைப்பதில்லை, அதைபராமரிக்கவேண்டும்.சாலை விபத்துகள் அதிகம் நடக்கும் இடங்களை கண்டறிந்து, அதனை சரி செய்ய வேண்டும்.

மக்களிடம் ஆதாரங்கள் இருந்தாலும் போக்குவரத்து காவல்துறை அபராதம் வசூலிப்பதாக புகார் வருகிறது, அதை தடுக்க வேண்டும். எடப்பாடி தொகுதியில் ஜலகண்டபுரத்தில் புறவழிச்சாலை அமைக்க 80% நிலம் எடுப்பு பணிகள் முடிந்து விட்டது.

திமுக ஆட்சியில் கைவிட்ட புறவழிச்சாலை திட்டத்தை தவெக அரசு செயல்படுத்த வேண்டும். அதிமுக ஆட்சியில் போல் விவசாயிகள் 22 மணி நேரம் மின் மோட்டாரை இயக்க அனுமதி வழங்க வேண்டும்.

## "அனைத்து கேள்விகளுக்கும் திங்கட்கிழமை பதில்; யாரும் ஓடிவிடக்கூடாது" சட்டசபையில் முதலமைச்சர் விஜய் பேச்சு



அனைத்து கேள்விகளுக்கும் திங்கட்கிழமை பதில் அளிப்பதாகவும், யாரும் ஓடிவிடக்கூடாது என்றும் சட்டசபையில்முதல்-அமைச்சர் விஜய் பேசினார்.

தமிழகத்தில் புதிதாக த.வெ.க. அரசு ஆட்சி பொறுப்பேற்றுள்ள நிலையில், கடந்த மாதம் (ஆகஸ்டு) 5-ந் தேதி பொது பட்ஜெட்டும், 6-ந் தேதி வேளாண் பட்ஜெட்டும் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இந்த நிலையில், ஆகஸ்டு 17-ந் தேதி முதல் துறை வாரியாக மானியக் கோரிக்கை விவாதம் நடைபெற்று வருகிறது.

அந்தவகையில்,நேற்று வரை43துறைகள் மீதான மானியக் கோரிக்கை விவாதம் நடந்து முடிந்துள்ளது. இந்த நிலையில், முதல்-அமைச்சர் ஜோசப் விஜய்யின் கையில் உள்ள காவல், தீயணைப்பு மற்றும் மீட்பு பணிகள் துறை மீதான மானியக் கோரிக்கை விவாதம் (வியாழக்கிழமை) நடைபெற்றது.

சட்டம் - ஒழுங்கு சம்பந்தப்பட்ட துறை என்பதால்,விவாதத்தின்போது அனல் பறக்கும் என்று எதிர்பார்க்கப்பட்டது. விவாதத்தை தொடங்கி வைத்து பேசிய எதிர்க்கட்சி தலைவர் உதயநிதி ஸ்டாலின், த.வெ.க. அரசின் செயல்பாடு குறித்து அடுக்கடுக்காக குற்றம்சாட்டினார். அதற்கு முதல் - அமைச்சர் ஜோசப் விஜய் பதில் அளிக்க வேண்டும் என்றும் கூறினார்.

ஆனால், உதயநிதி ஸ்டாலின் கேள்விகளுக்கு முதல்-அமைச்சர் ஜோசப் விஜய் பதில் அளிக்கவில்லை.மாறாக, அமைச்சர்கள் பதில் அளித்து கொண்டிருந்தனர். அதற்கு தி.மு.க. உறுப்பினர்களும் கடும் எதிர்ப்பு தெரிவித்து வந்தனர் யாரும் ஓடிவிடக்கூடாது

இதனால், சட்டசபையில் விவாதம் அனல் பறந்தது. இதற்கிடையே யாரும் எதிர்பாராத நேரத்தில் முதல் - அமைச்சர் ஜோசப் விஜய் எழுந்து பேசினார். அப்போது அவர் கூறியதாவது:-

"அனைத்து கேள்விகளுக்கும் திங்கட்கிழமை பதிலளிப்பேன். நான் இங்கு இல்லை என்றாலும், இங்கு எழுப்பப்படும் அனைத்து கேள்விகளையும் நான் அறிவேன். ஒரே ஒரு கோரிக்கை வைக்கிறேன். பதிலளிக்கும்போது யாரும் எழுந்து ஓடிவிடக்கூடாது.

இவ்வாறு அவர் பேசினார்.

அத்துடன், சட்டசபையை விட்டும் முதல்-அமைச்சர்ஜோசப்விஜய் வெளியேறினார். முதல்-அமைச்சரின் இந்த கருத்துக்கும்எதிர்க்கட்சி தலைவர் உதயநிதி ஸ்டாலின் உள்பட தி.மு.க. உறுப்பினர்கள் கடும் எதிர்ப்பு தெரிவித்தனர். தொடர்ந்து, எதிர்க்கட்சி தலைவர் உதயநிதி ஸ்டாலின் பேசினார். அவரது குற்றச்சாட்டுகளுக்கு அமைச்சர்கள் ஆனந்த், ஆதவ் அர்ஜூனா, ராஜ்மோகன் ஆகியோர் பதில் அளித்தனர்.

## அரசின் திட்டங்கள் 110 விதியின் கீழ் அறிவிக்கப்பட்டால் தனியாக நிதிநிலை அறிக்கை எதற்கு? சீமான் கேள்வி



நாம் தமிழர் கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறப்பட்டு இருப்பதாவது;

"தமிழ்நாடு சட்டப்பேரவையில் 110 விதியைப் பயன்படுத்தி அரசின் திட்டங்கள் பலவற்றை தமிழ்நாடு முதல்வர் விஜய் அறிவித்து வருவது மக்களாட்சிக்கும், அதனை நம்பி வாக்களித்த மக்களுக்கும் எதிரானதாகும்.

நடைபெற்று வரும் தமிழ்நாடு சட்டப்பேரவை கூட்டத்தொடரில் 2026-27 ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையில் அறிவிக்கப்பட்ட திட்டங்கள் குறித்த நிறை - குறைகள் குறித்து விவாதித்து முடிவெடுக்கக் கடந்த ஒரு மாத காலமாகச் சட்டப்பேரவை கூட்டத்தொடர் நடைபெற்று வருகிறது. ஆனால்,110 விதியின் கீழ் சிறப்பு அறிவிப்புகள் என்ற பெயரில், நிதிநிலை அறிக்கையில் இல்லாத புதிய திட்டங்களை ஒவ்வொரு நாளும் தமிழ்நாடு முதல்வர் அறிவித்து வருவது ஏன்? எல்லாத் திட்டங்களும் 110 விதியின் கீழே அறிவிக்கப்படும் என்றால் தனியாக நிதிநிலை அறிக்கை என்ற ஒன்று எதற்கு? அதன் மீதான விவாதங்கள்தான் எதற்கு? சட்டப்பேரவையில் முதலமைச்சர் வெளியிடுவது அனைத்தும் முக்கியத் திட்டங்கள் என்றால் அதன் நன்மை தீமைகள் குறித்து அவையில் விவாதங்கள் நடைபெற வேண்டாமா?

மக்களுக்குத் தேவையான இன்றியமையாத திட்டங்கள் என்றால் அவை ஏன் நிதிநிலை அறிக்கையில் இடம்பெறவில்லை?பொது முக்கியத்துவம் வாய்ந்த அரசு முடிவுகள் மற்றும் புதிய திட்டங்களைப் பேரவைத்தலைவர் அனுமதியுடன் சட்டப்பேரவையில் அறிவிக்கவும், அறிவிக்கும் நேரத்தில் அதன் மீது விவாதம் நடைபெறாமல் இருக்கவும் கடந்த திமுக அதிமுக அரசுகள் விதி 110யை பயன்படுத்தினார்கள். அதை, மாற்றம் எனச் சொல்லி வந்த தவெக அரசு, விளம்பர வெற்று அறிவுப்புகளுக்குப் பயன்படுத்துவது நம்பி வாக்களித்த மக்களுக்குச் செய்யும் துரோகமல்லவா? இதுதான் மாற்றமா?

சட்டங்களை உருவாக்கவும், விவாதிக்கவும், நிறைவேற்றவும் அமைக்கப்பட்ட மக்கள் பிரதிநிதிகளின் அவையான சட்டப்பேரவையில் இவ்விதியை பயன்படுத்தி நிதிநிலை அறிக்கையில் இடம்பெறாத திட்டங்களை ஒவ்வொரு நாளும் வெளியிடுவதும் அதன் மீது விவாதமில்லாமல் கடந்துபோவதும்சட்டப்பேரவை உருவாக்கப்பட்டதற்கான நோக்கத்தையே சிதைக்காதா?

மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்கள் நிறைந்திருக்கும் அவையில், மக்களுக்காக அறிவிக்கப்படும் திட்டங்கள் குறித்து, சட்டமன்ற உறுப்பினர்கள் கருத்தும் தெரிவிக்கும் வாய்ப்பை பறிப்பது கொடுங்கோன்மை அல்லவா?

முதலமைச்சரின் பொறுப்பிலிருந்த துறைகளையே, மற்ற அமைச்சர்களுக்கு ஒதுக்கிவிட்ட நிலையில்,மற்றஅமைச்சகம் சார்ந்த அறிவிப்புகளை வெளியிடுவதற்கு மட்டும் முதலமைச்சர் எதற்கு? அமைச்சர்கள் வெளியிட வேண்டிய அறிவிப்புகளை முதலமைச்சர் வெளியிடுவது, அமைச்சர்களின் தனித்துவத்தைக்குறைக்காதா? இதன் மூலம் தவெக அரசு தமிழ்நாட்டு மக்களுக்குச் சொல்ல வரும் செய்திஎன்ன?அனைத்து முக்கியத் திட்டங்களும் முதலமைச்சரின் மூளையில் உதித்தது என்பதையா?

கடந்த ஆகஸ்ட் 17ஆம் தேதியிலிருந்து இன்று வரை தவெக அரசு விதி 110-ன் கீழ் வெளியிடப்பட்ட திட்டங்களுக்கான மதிப்பு மட்டும் ஏறத்தாழ ரூ.73,900 கோடி. அதற்கு மேலாக எரிகாற்று உருளை, இலவச பேருந்து,பால் கொள் முதல் உள்ளிட்டவற்றுக்கு ஆண்டுதோறும் தொடர் செலவாக 10,720 கோடி ரூபாய் வரை தேவைப்படுகிறது. இத்தனை ஆயிரம் கோடிகள் செலவிடப்படும் திட்டங்களின் வரவு செலவுகள் நிதிநிலை அறிக்கையில் இடம்பெறாதது ஏன்?

நிதிநிலை அறிக்கையின்படி ஏற்கனவே இந்த ஆண்டு மட்டும் ஒரு லட்சத்தி எழுபத்தாறாயிரம் கோடி கடன் வாங்குவதாக அறிவித்திருக்கிறீர்கள். இப்பொழுது புதிதாக 110 விதியின் கீழ் அறிவித்திருக்கிற திட்டங்களுக்கான ரூ.73,900 கோடிக்கான நிதியை எப்படி பெறுவீர்கள்? யாரிடம் கடன் வாங்குவீர்கள்? இதுதான் கடன் சுமையை குறைக்கும் முறையா? இதுதான் தமிழ்நாட்டை முன்னேற்றுவதற்கான மாற்றமா?

மக்களாட்சிக்கு எதிரான, நிதி ஆதாரமில்லாத வெற்று விளம்பர திட்டங்களை 110 விதியின் கீழ் அறிவிப்பதை உடனடியாக நிறுத்திக்கொள்ள வேண்டுமென நாம்தமிழர் கட்சி சார்பாக வலியுறுத்துகிறேன்."

இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## நேபாள வெள்ளம்: காணாமல் போனவர்களை அடையாளம் காண தமிழக அரசு சார்பில் டி.என்.ஏ. பரிசோதனைக்கு ஏற்பாடு




நேபாள பெருவெள்ளத்தில் காணாமல் போனவர்களை அடையாளம் காண்பதற்கு ஏதுவாக, தமிழ்நாடு அரசால் சென்னை, மதுரை மற்றும் தஞ்சாவூர் ஆகிய மண்டலங்களிலுள்ள தடய அறிவியல் ஆய்வகங்களின் மூலமாக டி.என்.ஏ. பரிசோதனை செய்வதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இது தொடர்பாக வெளியிடப்பட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறப்பட்டுள்ளதாவது;-

"கடந்த 26.8.2026 அன்று, நேபாளத்தில் ஏற்பட்ட திடீர் பெருவெள்ளத்தில் நூற்றுக்கணக்கான தமிழர்கள் சிக்கியதைத் தொடர்ந்து, அவர்களை விரைந்து மீட்க தமிழ்நாடு அரசு, மத்திய அரசுடனும், நேபாள அரசுடனும் இணைந்து பல்வேறு தொடர் நடவடிக்கைகள் எடுத்து வருகிறது. இதன்படி, சென்னையில் அயலகத் தமிழர் நலத்துறை ஆணையரகத்திலும் புதுடெல்லி தமிழ்நாடு இல்லத்திலும் உதவி மையம் / அவசரக் கட்டுப்பாட்டு அறை அமைக்கப்பட்டு, அவசர உதவி எண்கள் அறிவிக்கப்பட்டன.

2.9.2026 நிலவரப்படி, தமிழ்நாட்டைச் சேர்ந்த மொத்தம் 305 பேரில் 220 பேர் பாதுகாப்பாக மீட்கப்பட்டுள்ளனர், மீதமுள்ள 85 நபர்களைத் தொடர் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. தமிழ்நாடு அரசு, மத்திய அரசு, நேபாள அரசு மற்றும் இந்திய தூதரகத்துடன் தொடர்ந்து ஒருங்கிணைந்து, நேபாள பெருவெள்ளத்தில் சிக்கியுள்ள தமிழர்களை பாதுகாப்பாக மீட்டு தமிழ்நாட்டிற்கு அழைத்து வருவதற்கான அனைத்து நடவடிக்கைகளும் தீவிரமாக தமிழ்நாடு அரசால் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இதன் தொடர்ச்சியாக, இப்பெருவெள்ளத்தில் காணாமல் போனவர்களை அடையாளம் காண்பதற்கு ஏதுவாக, நேபாள அரசு வெளியிட்டுள்ள நிலையான வழிகாட்டு நெறிமுறைகளின்படி, காணாமல் போனவர்களின் முதல்நிலை உறவினர்களில் (First Degree Relatives) விருப்பமுள்ளவர்கள் டி.என்.ஏ. பரிசோதனை செய்வதற்கு, தமிழ்நாடு அரசால் சென்னை, மதுரை மற்றும் தஞ்சாவூர் ஆகிய மண்டலங்களிலுள்ள தடய அறிவியல் ஆய்வகங்களின் மூலமாக ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இப்பெருவெள்ளத்தில் காணாமல் போனவர்களின் முதல்நிலை உறவினர்களான தாய் (அல்லது) தந்தை (அல்லது) மகன் (அல்லது) மகள் கட்டணமின்றி இச்சோதனை எடுத்துக்கொள்ள வசதிகள் செய்யப்பட்டுள்ளன.

டி.என்.ஏ.பரிசோதனை மண்டலங்கள் பின்வருமாறு:-

சென்னை
காஜா மொய்தீன்,
இயக்குநர், தடய அறிவியல் துறை,
30A, காமராஜர் சாலை, மயிலாப்பூர், சென்னை - 600 004.
கைபேசி எண் - 9941464808.

மதுரை
திரு. விஜயேந்திரன்,
துணை இயக்குநர், தடய அறிவியல் ஆய்வகம்,
கலெக்டர் சாலை, மதுரை மருத்துவக் கல்லூரி வளாகம்,
மதுரை - 625 020.
கைபேசி எண் - 8637674451.

## Central govt offices in Delhi to remain closed on September 11 for BRICS Summit



Central government offices in Delhi and New Delhi will remain closed on September 11, 2026, in view of the 18th BRICS Leaders' Summit being hosted in the national capital. The Ministry of Personnel, Public Grievances and Pensions issued an official memorandum on Thursday, saying the decision was taken considering the magnitude of the event, substantial logistical arrangements involved and the need to minimise inconvenience to the general public. The Delhi government had earlier also declared September 11 a holiday for all government offices, autonomous bodies and public sector undertakings under the Delhi government.

The BRICS Business Forum and the 18th BRICS Leaders' Summit will be held from September 11 to 13 at Bharat Mandapam in New Delhi. The summit is expected to be attended by leaders from around 30 BRICS member and partner countries, heads of international organisations and business representatives from BRICS nations, including India. The closure on September 11 is also expected to help ease the impact of the extensive security and traffic arrangements that will be put in place across the capital during the high-level event. September 12 and 13 fall on Saturday and Sunday, respectively.

Printed by, Sri Simmha Enterprises, Published by M.APROSE, onbehalf of M.APROSE, printed at THIRUVALLUR, and Published at ,1, THATTANKAADU 4TH STREET, KONGU VELAAN NAGAR, VTC PERIYASEMUR, PO: PERIA SEMUR, ERODE, TAMIL NADU - 638004 ,Editor HARI KRISHNAN M.